Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 2- Issue 2 (2018), Pages 146-155 / ISSN: eISSN 2590-3691

ORIGINAL ARTICLE

# தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் இடைநிலைப்பள்ளி மாணவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள்

# PROBLEMS FACED BY PT3 STUDENTS IN TEACHING AND LEARNING OF TAMIL LANGUAGE

**கீர்த்தனா குணசேகரன் [1] / Kirtana Gunasekaran [1]**
[1]கூலிம், கெடா, மலேசியா / Kulim, Kedah, Malaysia.
மின்னஞ்சல் / Email: kirtu_57@yahoo.com

**Abstract**

The title and the purpose of this study are the problems faced by PT3 students in teaching and learning of Tamil language. 10 teachers out of 5 different schools were involved in this research. Questionnaires and interviews were the instruments that have been used in this research. This is a qualitative research. In this research, the reasons for students' poor marks on PT3 Tamil language subject and also the ways to overcome those problems had been identified. Most of the problems occur from the students. Teachers should use various teaching aids which can attract the students, complete the syllabus on time and make sure students' complete the tasks given. Students' should try to do revisions on their own.

**Keywords**: Low Intermediate, Poor Mark, Teaching Aids, Syllabus

***ஆய்வுச் சாரம்***

இந்த ஆய்வில் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் இடைநிலைப்பள்ளி மாணவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள் அடையாளம் காட்டப்பட்டுள்ளது. இடைநிலைப்பள்ளியில் பி.தி.3 தமிழ்மொழித் தேர்வில் மாணவர்கள் சிலர் குறைவான மதிப்பெண்களைப் பெறுவதற்கான காரணங்கள் பற்றியும் இப்பிரச்சனையைத் தீர்க்கும் வழிமுறைகள் பற்றியும் இவ்வாய்வில் ஆராயப்பட்டுள்ளது. ஐந்து இடைநிலைப்பள்ளிகளைச் சேர்ந்த தமிழ்மொழிப் பாடம் கற்பிக்கும் பத்து ஆசிரியர்கள் இந்த ஆய்விற்கு உட்படுத்தப்பட்டனர். இந்த ஆய்வில் கருத்தறிவினா, நேர்காணல் ஆகியவை ஆய்வுக் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. திரட்டப்பட்டத் தகவல்களின் அடிப்படையில் மாணவர்களே தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சனைக்கு முதன்மை காரணமாகத் திகழ்கின்றனர் என்பது கண்டறியப்பட்டுள்ளது. அதோடு, ஆசிரியர்கள் மாணவர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் பலதரப்பட்ட பாடத்துணைப்பொருட்களை

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 2- Issue 2 (2018), Pages 146-155 / ISSN: eISSN 2590-3691

வகுப்பிற்குக் கொண்டு செல்லுதல், குறிப்பிட்ட காலத்தில் பாடத்திட்டதை முடிக்க வேண்டிய அவசியம், மாணவர்கள் குறுகிய நேரத்தில் கொடுக்கப்பட்ட பாடங்களை முடிப்பதை உறுதி செய்யதல், மாணவர்கள் சுயமாக மீள்பார்வை செய்வதற்கு முயற்சி செய்தல் போன்றவை இந்த ஆய்வின் பரிந்துரைகளாக முன்வைத்துள்ளது.

**கருச்சொற்கள்** : தமிழ்மொழிப் பாடம், பிந்தங்கிய நிலை, குறைவான மதிப்பெண்கள், பாடத்துணைப்பொருட்கள், பாடத்திட்டம்

## முன்னுரை

கல்வியே ஒரு மனிதனை முழுநிலையில் உருவாக்குகின்றது என்று விவேகானந்தர் கூறியுள்ளார் (கணபதி.வி, 2006)[1]. கற்றல் பாணி என்பது ஒன்றைப் புரிந்து கொண்டு நினைவில் வைத்துக் கொள்வதிலும் புதுத் திறனில் ஆளுமை பெறுவதிலும் கவனம் செலுத்துவதாகும் (Dunn & Dunn, 1980)[2]. எப்படி ஒவ்வொருவரின் தோற்றமும் குணமும் மாறுப்படுகிறதோ, அதே போல ஒவ்வொருவரின் கற்றல் பாணியும் மாறுபடும். முதல், இடை, கடை என்று அனைத்துத் தரத்திலுள்ள மாணவர்களும் தங்களுக்கு விருப்பமான பாணியிலே படிக்கின்றனர். சிலருக்கு அவர்கள் தேர்ந்தெடுத்த பாணி நல்லதோர் விளைப்பயனை வழங்கும் (Randolp, 2002)[3]. அவ்வகையில் மாணவர்கள் தங்களின் கற்றல் கற்பித்தலின் விளைவின் அடிப்படையிலேயே அவர்களின் தர அளவுகோளான தேர்வு புள்ளிகளும் விளங்கி வருகின்றன. தேர்வின் அடைவுநிலையே இன்றைய நாட்களில் உலகளவில் ஒருவரின் கல்வி அடைவுநிலை அளவுகோளாகப் பார்க்கப்படுகிறது. மொழிப்பாடங்கள், அறிவியல் தொழிநுட்பப் பாடங்கள், வாழ்வியல் பாடங்கள் என இன்று அனைத்துப் பாடங்களுக்கு தேர்வுகளின் வாயிலாகவே அப்பாட அடைவுநிலை நிர்ணியக்கப்படுகின்றன.

மலேசியாவில் மாணவர்கள் கட்டாயம் எழுத வேண்டிய மூன்று முக்கிய அரசு தேர்வுகள் உள்ளன. அவை யூ.பி.எஸ்.ஆர், பி.தி.3 மற்றும் எஸ்.பி.எம் தேர்வுகளாகும். இத்தேர்வுகளில் ஒரு தேர்வுப் பாடமாகத் தமிழ்மொழிப் பாடமும் விளங்குகிறது. தேர்வுகளில் சிறந்த தேர்ச்சி பெறுவதும் குறைந்த மதிப்பெண்கள் பெறுவதும் இயல்பான ஒன்றே. அவ்வகையில் இக்கட்டுரையில் ஆய்வாளர் பி.தி.3 தேர்வில் தமிழ்மொழிப் பாடத்தில் குறைந்த மதிப்பெண்களைப் பெறும் மாணவர்களைப் பற்றி ஆராய்ந்துள்ளார்.

பி.தி.3 தேர்வு மலேசியாவில் 2014ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. பி.தி.3 என்றால் மூன்றாம் படிவ மாணவர்களுக்கான மதிப்பீடு (Pentaksiran Tingkatan 3). இத்தேர்வில் தமிழ்மொழிப் பாடத்திற்கு 100 விழுக்காடு புள்ளிகளும் எழுத்துத் திறனுக்கே வழங்கப்படுகின்றன (மலேசியத் தேர்வு வாரியம்). பி.தி.3 தமிழ்மொழி தேர்வுத் தாளில் நான்கு பிரிவுகள் உள்ளன. அவை பிரிவு அ இலக்கணமும் மொழியணியும் (கேள்வி 1-4), பிரிவு ஆ கருத்துணர்தல் (கேள்வி 5-12), பிரிவு இ கருத்துரைத்தல் (கேள்வி 13), பிரிவு ஈ கட்டுரை (கேள்வி 14) ஆகியவையாகும். மாணவர் முதல் கேள்வியிலிருந்து பதிமூன்றாவது கேள்வி வரை அனைத்துக் கேள்விகளுக்கும் பதிலளிக்க வேண்டும். 14ஆவது கேள்வியில் மூன்று

மாறுப்பட்ட கட்டுரை தலைப்புகள் வழங்கப்பட்டிருக்கும். முதலாவது கருத்து விளக்க கட்டுரை, இரண்டாவது வடிவக் கட்டுரை, மூன்றாவது சிறுகதை கட்டுரையாகும். மாணவர்கள் இம்மூன்றில் ஏதேனும் ஒரு தலைப்பைத் தேர்ந்தெடுத்து 150 சொற்களுக்குக் கட்டுரை எழுத வேண்டும். இந்தத் தேர்வை எழுதும் மாணவர்களின் அடைவுநிலை அவர்களின் தரத்திற்கேற்பவே அமைந்திருக்கும். சில மாணவர்கள் மிகவும் குறைந்த புள்ளிகளை எடுத்துப் பிந்தங்கிய நிலையில் இடம்பெறுகின்றனர். இவர்களின் இந்தக் குறைந்த அடைவுநிலைக்கான காரணங்களை அடையாளங்கான இக்கட்டுரை முயன்றுள்ளது.

## ஆய்வு நோக்கம்

கூலிம் மாவட்டத்தில் தமிழ்மொழியைத் தெரிவுப் பாடமாக எடுக்கும் மாணவர்களில் சிலர் பி.தி.3 தேர்வில் குறைந்த மதிப்பெண்களைப் பெறுவதற்கான காரணங்களையும் அதன் தீர்வுகளையும் கண்டறிதல்.

## ஆய்வு எல்லை

கற்றல் கற்பித்தலில் மாணவர்கள் பல சிக்கலை எதிர்நோக்குகின்றனர். அதிலும் முக்கியமாக இடைநிலைப்பள்ளி மாணவர்களைக் குறிப்பிடலாம். மாணவர்களுக்கு ஏற்படும் சிக்கலினால் அவர்களால் பாடத்தில் சரியாகக் கவனம் செலுத்த முடியவில்லை.

இந்த ஆய்வு கூலிம் மாவட்டத்தில் உள்ள ஐந்து இடைநிலைப்பள்ளிகளைச் சேர்ந்த பத்து மூன்றாம் படிவ தமிழ்மொழி ஆசிரியர்கள் உட்படுத்தப்பட்டனர்.

## ஆய்வு கண்டுப்பிடிப்புகள்

### கருத்தறி வினாநிரல்

கீழ்க்காணும் அட்டவணை ஆசிரியர்களுக்கு வழங்கிய கருத்தறி வினாநிரலின் முடிவுகளைக் குறிப்பிடுகின்றது. இதில் 3 என்பது ஏற்றுக்கொள்கிறேன் என்றும், 2 என்பது நடுநிலை என்றும், 1 என்பது ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் குறிக்கின்றன.

அட்டவணை 1:
மாணவர்களின் அடைவுநிலை குறித்த ஆசிரியர்களின் கருத்துகள்

| கேள்விகள் | மதிப்பீட்டு எண் | | |
|---|---|---|---|
| | 3 | 2 | 1 |
| 1. இந்த மாணவர்கள் வீட்டுப்பாடங்களைச் சரியாகச் செய்து விடுவர். | 0 | 6 | 4 |
| 2. இவர்கள் வகுப்பில் ஆசிரியர் கற்பிக்கும் பொழுது முழுக் கவனத்தைச் செலுத்துவர். | 0 | 5 | 5 |
| 3. இவர்களில் பலருக்குக் கட்டொழுங்கு பிரச்சனைகள் உள்ளன. | 1 | 7 | 2 |
| 4. இவர்களுக்குத் தமிழ்மொழிப் பாடத்தின் மீது ஆர்வம் உள்ளது. | 1 | 6 | 3 |
| 5. இவர்களுக்குப் பிரத்தியேக வகுப்புகள் நடத்தினால் நன்றாகப் படிப்பதற்கு வாய்ப்புகள் உள்ளன. | 2 | 1 | 7 |
| 6. இவர்களுக்குப் பள்ளியில் போதுமான பயிற்சி புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. | 2 | 3 | 5 |
| 7. வகுப்பு நேரத்தில் ஆசிரியர்கள் இவர்கள் மீது சிறப்புக் கவனம் செலுத்துகின்றனர். | 8 | 2 | 0 |
| 8. இவர்களில் பலர் உடல் குறை உள்ளவர்களாகத் திகழ்கின்றனர். | 0 | 1 | 9 |
| 9. தமிழ்மொழிச் சேர்த்து அனைத்துப் பாடங்களிலும் இவர்கள் பின்தங்கி உள்ளனர். | 7 | 3 | 0 |
| 10. பள்ளியில் இவர்களுக்குத் தமிழ்மொழிப் பாட வேளை (3 பாட வேளை) போதுமானதாக உள்ளது. | 1 | 4 | 5 |
| 11. இம்மாணவர்கள் வகுப்பில் ஆசிரியர் கற்பிக்கும் பொழுது புரியாத பாடங்களைக் கேட்டு விளக்கம் பெறுவர். | 0 | 3 | 7 |
| 12. இவர்கள் தமிழ்மொழி வகுப்பிற்குத் தவறாமல் வருகிறார்கள். | 4 | 2 | 4 |
| 13. இவர்களுக்குச் சிந்தனைத் திறன் குறைவாக உள்ளது. | 9 | 1 | 0 |
| 14. பி.தி.3 தேர்வில் கேட்கப்படும் கேள்விகள் இம்மாணவர்களுக்குக் கடினமாக உள்ளன. | 8 | 2 | 0 |
| 15. இவர்கள் தேர்வில் சிந்திக்காமல் அவசர அவசரமாகப் பதிலளிக்கின்றனர். | 2 | 8 | 0 |

முதல் கேள்விக்கு 60 விழுக்காடு ஆசிரியர்கள் நடுநிலை என்றும், 40 விழுக்காடு ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் பதிலளித்தனர். இரண்டாவது கேள்விக்கு 50 விழுக்காடு ஆசிரியர்கள் நடுநிலை என்றும், 50 விழுக்காட்டினர் ஏற்றுக்கொள்கிறேன் என்றும் பதிலளித்தனர். மூன்றாவது கேள்விக்கு 10 விழுக்காட்டினர் ஏற்றுக்கொள்கிறேன் என்றும், 70 விழுக்காட்டினர் நடுநிலை என்றும், 20 விழுக்காட்டினர் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் பதிலளித்தனர். நான்காவது கேள்விக்கு 10 விடுக்காட்டு ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்கிறேன்

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 2- Issue 2 (2018), Pages 146-155 / ISSN: eISSN 2590-3691

என்றும், 60 விழுக்காட்டு ஆசிரியர்கள் நடுநிலை என்றும், 30 விழுக்காட்டு ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் பதிலளித்துள்ளனர். ஐந்தாவது கேள்விக்கு 20 விழுக்காட்டினர் ஏற்றுக்கொள்கிறேன் என்றும், 10 விழுக்காட்டினர் நடுநிலை என்றும், 70 விழுக்காடினர் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் பதிலத்தனர். ஆறாவது கேள்விக்கு 20 விழுக்காட்டினர் ஏற்றுக்கொள்கிறேன் என்றும் 30 விழுக்காட்டினர் நடுநிலை என்றும், 50 விழுக்காட்டினர் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் பதிலளித்தனர். ஏழாவது கேள்விக்கு 80 விழுக்காட்டினர் ஏற்றுக்கொள்கிறேன் என்றும், 20 விழுக்காட்டினர் நடுநிலை என்றும் பதிலளித்துள்ளனர். எட்டாவது கேள்விக்கு 10 விழுக்காட்டினர் நடுநிலை என்றும் 90 விழுக்காட்டினர் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் பதிலளித்தனர்.

ஒன்பதாவது கேள்விக்கு 70 விழுக்காட்டு மாணவர்கள் ஏற்றுக்கொள்கிறேன் என்றும், 30 விழுக்காட்டு மாணவர்கள் நடுநிலை என்றும் பதிலளித்தனர். பத்தாவது கேள்விக்கு 10 விழுக்காட்டினர் ஏற்றுக்கொள்கிறேன் என்றும், 40 விழுக்காட்டினர் நடுநிலை என்றும், 50 விழுக்காட்டினர் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் பதிலளித்தனர். பதினோராவது கேள்விக்கு 30 விழுக்காட்டினர் நடுநிலை என்றும், 70 விழுக்காட்டினர் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் பதிலளித்தனர். பன்னிரெண்டாவது கேள்விக்கு 40 விழுக்காட்டினர் ஏற்றுக்கொள்கிறேன் என்றும், 20 விழுக்காட்டினர் நடுநிலை என்றும், 40 விழுக்காட்டினர் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் பதிலளித்தனர். பதிமூன்றாவது கேள்விக்கு 90 விழுக்காட்டினர் ஏற்றுக்கொள்கிறேன் என்றும், 10 விழுக்காட்டினர் நடுநிலை என்றும் பதிலளித்தனர். பதினான்காவது கேள்விக்கு 80 விழுக்காட்டினர் ஏற்றுக்கொள்கிறேன் என்றும், 20 விழுக்காட்டினர் நடுநிலை என்றும் பதிலளித்தனர். பதினைந்தாவது கேள்விக்கு 20 விழுக்காட்டினர் ஏற்றுக்கொள்கிறேன் என்றோம், 80 விழுக்காட்டினர் நடுநிலை என்றும் பதிலளித்தனர்.

**மாணவர்கள் சிறந்த புள்ளிகளைப் பெறாததற்கான காரணங்கள்**

**மாணவர்களினால் மாணவர்களுக்கு ஏற்படும் சிக்கல்**

ஆசிரியர்களிடம் நடத்தப்பட்ட நேர்க்காணலின் அடிப்படையில், பெரும்பாÄ¡É கடைநிலை மாணவர்கள் வகுப்பில் ஆசிரியர் கற்பிக்கும் பொழுது கவனம் செலுத்து இல்லை என்பது அறியப்படுகிறது. பக்கத்தில் இருக்கும் நண்பர்களுடன் உரையாடுவது, பாடத்தைத் தவிர்த்து வேறு வேலைகளைச் செய்வது போன்ற தேவையற்ற செயல்களில் வகுப்பு நேரத்தில் அவர்கள் ஈடுப்படுகின்றனர் என ஆசிரியர்கள் கூறுகின்றனர். இது போன்ற செயல்களில் ஈடுப்படுவதினால் ஆசிரியர் கற்பிப்பது இவர்களை முழுமையாகச் சென்றடைவதில்லை. வகுப்பில் ஆசிரியர் கற்பிப்பதைக் கவனிக்காத இம்மாணவர்கள் ஆசிரியர் கொடுக்கும் வீட்டுப்பாடங்களையும் செய்வதில்லை. கவனச் சிதறல் ஏற்படுவதனால் அவர்களால் தேர்வில் சிறந்த புள்ளிகளைப் பெற இயலவில்லை.

அறிவையும் தகவல்களையும் சேகரித்து வைத்துக் கொள்ள நினைவாற்றல் மிகவும் அவசியம். இதனை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை உடனடி நினைவாற்றல்,

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 2- Issue 2 (2018), Pages 146-155 / ISSN: eISSN 2590-3691

குறுகியக் கால நினைவாற்றல் மற்றும் நீண்ட கால நினைவாற்றல் (Fatah Hasan, 2001)[4]. பி.தி.3 தமிழ்மொழி தேர்வு எழுதும் மாணவர்களுக்கு நீண்ட கால நினைவாற்றல் மிகவும் அவசியம். இலக்கண இலக்கியப் பகுதிகளுக்கு விடையளிப்பதற்கு மனனம் செய்யும் திறன் அவசியமானதாக விளங்குகிறது. சில மாணவர்கள் உயர்நிலைச் சிந்தனை கேள்விகளுக்குச் (HOTS) சரியாகச் சிந்தித்துப் பதிலளிப்பர் மாறாக மனனம் செய்து எழுத வேண்டிய பகுதிகளுக்கு விடையளிப்பதற்குச் சிரமப்படுவர். தேர்வில் இலக்கண இலக்கியம் சம்பந்தப்பட்ட கேள்விகள் கேட்பது குறைவாக இருப்பினும் மனனம் செய்ய வேண்டிய பகுதிகள் நிறைய உள்ளன. கடைநிலை மாணவர்கள் பெரும்பாலோர் மனனம் செய்ய விரும்புவதில்லை. படித்தாலும் மறந்துவிடுகின்றனர். இதனால் அவர்களினால் சிறந்த தேர்ச்சியைப் பெற இயலவில்லை என நேர்க்காணல் செய்யப்பட்ட ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

பி.தி.3 தேர்வில் குறைந்த புள்ளிகளைப் பெறும் மாணவர்களின் ஆழமாக யோசிக்கத் தவறுகின்றனர். பி.தி.3 தமிழ்மொழி தேர்வு தாளில் பெரும்பாலான கேள்விகள் உயர்நிலைச் சிந்தனைக் கேள்விகளாக விளங்கிகின்றன. மாணர்களின் ஆழமான சிந்தனை இக்கேள்விகளுக்குப் பதிலளிக்கத் தேவைப்படுகின்றது. பிந்தங்கிய மாணவர்கள் உயர்நிலை கேள்விகளுக்கு எவ்வாறு பதிலளிப்பதென்று தெரியவதில்லை. இவர்கள் ஆசிரியர் வகுப்பில் கற்பிக்கும் பொழுது புரியாதவற்றைக் கேட்டு விளக்கம் பெறாததால் தேர்வு நேரத்தில் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். சில மாணவர்கள் பி.தி.3 தேர்வில் கேட்கப்படும் கேள்விகள் கடினமாக உள்ளன என்று கருத்துரைக்கின்றனர். உண்மையில் கேள்விகள் கடினத் தன்மை என்று சொல்ல முடியாதென ஆசிரியர்கள் கூறுகின்றனர். மாணவர்கள் கேள்வியைச் சரியாகப் புரிந்து கொண்டால் நிச்சயமாகப் பதில் எழுத முடியும் என ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

பி.தி.3 தேர்வில் குறைந்த மதிப்பெண்களைப் பெறும் மாணவர்கள் தேர்வில் சிந்திக்காமல் அவசர அவசரமாகப் பதிலளிக்கின்றனர். கொடுக்கப்பட்டுள்ள கட்டளைகளையும் வாசிப்பதில்லை. அவர்களுக்குத் தெரிந்த குறுகிய தகவல்களைத் தேவையற்ற இடங்களில் எழுதி விடுகின்றனர். பின்னர், எழுதிய விடைகளைச் சரிப் பார்ப்பதும் இல்லை. சில சமயங்களில் தேர்வுத் தாளிலுள்ள தொடக்க கேள்விகளுக்குப் பதிலளிக்க தெரியாததால் தொடர்து பதிலளிக்க ஆர்வம் காட்டுவதில்லை என்பது ஆசிரியர்களின் குற்றச்சாட்டாக அமைகின்றது.

அதேவேளையில், பெரும்பாலும் தமிழ்மொழி மீது ஆர்வமில்லாத மாணவர்கள்தான் தமிழ்மொழிப் பாடத்தில் பிந்தங்கிய முடிவுகளைப் பெறுகின்றனர். தமிழ்மொழியைப் படித்து என்ன செய்ய போகிறோம் என்ற தவறான எண்ணங்களைத் தங்களுக்குள் அம்மாணவர்கள் விதைத்துள்ளனர். தமிழ்மொழியில் சிறந்த புள்ளிகளைப் பெறுவதினால் கிடைக்கும் வேலை வாய்ப்புகளைப் பற்றி அவர்கள் அறியாமல் இருக்கின்றனர்.

மேலும், மாணவர்கள் பி.தி.3 தமிழ்மொழித் தாள் கடினம் என்று தவறுதலாக நினைத்துக் கொள்கின்றனர். பிறரின் பேச்சைக் கேட்டுக்கொண்டு இவர்கள் பாடத்தின் மீது நாட்டம் செலுத்துவதில்லை. இன்னும் சில மாணவர்கள் தமிழ்மொழியைக் கற்க விரும்பாமல்

கட்டாயத்தின் பேரில் கற்கின்றனர். பிடிக்காத ஒன்றைப் பிறருக்காகச் செய்யும் பொழுது சிறப்பான முடிவைப் பெற இயலாமல் போகின்றது. பி.தி.3 தேர்வுக்க்கு முந்தைய தேர்வான பி.எம்.ஆர் தமிழ்மொழித் தேர்வில் இரண்டு தாட்கள் இருந்தன. தாள் ஒன்றில் உள்ள கேள்விகள் பலவகை விடை அமைப்பில் இருந்தன. மாணவர்கள் சரியான விடையைத் தேர்ந்தெடுக்கலாம். பி.தி.3 தேர்வில் அவ்வாறு இல்லை. மாணவர்கள் அனைத்துக் கேள்விகளுக்கும் சுயமாகச் சிந்தித்துப் பதிலளிக்க வேண்டும். பின்தங்கிய மாணவர்களுக்கு இது சவாலாக அமைகிறது. ஒன்றாவது கேள்வி முதல் 14ஆவது கேள்வி வரை அனைத்துமே வாக்கியத்தில் எழுத வேண்டும். முதல் நிலை மாணவர்களே சீரான ஒரு வாக்கியத்தை எழுத்த சிரமப்படும் பட்சத்தில் கடைநிலை மாணவர்களின் நிலை கேள்விக்குறியே. உதாரணமாக, ‘இடையின மெய் எழுத்துக்கள் யாவை?’. பி.எம்.ஆர் தேர்வில் மாணவர்கள் A, B, C, D ஆகிய விடைகளில் ஏதேனும் ஒரு விடையை ஊகித்து வட்டமிடலாம். ஆனால், பி.தி.3 தேர்வில் மாணவர்கள் விடையைச் சுயமாகவே எழுத வேண்டும். மாணவர்கள் பலர் விடை தெரியாமல் மாணவர்கள் தடுமாறுகின்றனர். வகுப்பில் கவனம் செலுத்திப் படித்திருந்தாலே மாணவர்களால் பதில் எழுத முடியும். மேலும், பதில் அஎழுதும் பொழுது எழுத்து விடுப்பட்டாலோ, தவறாக எழுதினாலோ அந்தப் பதில் ஏற்றுக்கொள்ளப்படாமல் புள்ளிகள் பெறுவதிலும் தவறிவிடுகின்றது.

தமிழாசிரியர்களின் கூற்றுப்படி தமிழ்மொழியில் வாசிப்புப் பயிற்சி செய்யாத மாணவர்களே குறைந்த மதிப்பெண்களைப் பெறுகின்றனர். நிறைய வாசிக்காததால் அவர்கள் நிறைய எழுத்துப் பிழைகளைச் செய்கின்றனர், மொழியில் பிரச்சனை ஏற்படுகின்றது. பி.தி.3 தேர்வில் வாசிப்பு மிகவும் அவசியம். வாசித்துக் கிரகித்துக் கொண்டால்தான் கேட்கப்படும் கேள்விக்குப் பதிலளிக்க முடியும். தவறுதலாக வாசித்துத் தவறுதலாகப் புரிந்து கொண்டு தவறான விடையையே பிந்தங்கிய மாணவர்கள் எழுதுகின்றனர். தமிழ்மொழியில் ஆளுமை இல்லாத காரணத்தினால் சிறப்பான தேர்ச்சிகளை இவர்கள் பெறுவதில்லை.

**மாணவர்களின் பிற சிக்கல்கள்**

நேர்காணல் செய்யப்பட்ட ஆசிரியர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பி.தி.3 தமிழ்மொழி மாணவர்களின் சிக்கல்களாகப் பின்வருபவையும் கூறப்பட்டன. இடைநிலைப்பள்ளியில் தமிழ்மொழிப் பாடம் மூன்று பாட வேளைகளில் மட்டுமே கற்பிக்கப்படுகின்றன. முதல் நிலை மாணவர்களுக்கு மூன்று பாட வேளைகள் போதுமானதே. கடைநிலை மாணவர்களினால் மூன்று பாட வேளையில் நிறைய தகவல்களைக் கிரகித்துக் கொள்ள இயலாது. சில வகுப்புகளில் மூன்று நிலை மாணவர்களும் கலந்து இருப்பர். அவ்வகுப்பில் பிந்தங்கிய மாணவர்களுக்கு ஆசிரியர் கற்பிப்பதே சில சமயங்களில் புரியாது. ஆகையால், அவர்களின் அறிவு நிலையில் எந்தவித மாற்றமும் ஏற்படுவதில்லை.

சந்தானம் (2008)[5] ஒவ்வொரு மனிதரும் தனக்கென ஒரு கற்றல் பாணியுடன் பிறந்திருப்பர் என்று கூறியுள்ளார். அதுமட்டுமின்றி, ஒருவரின் குடும்பமும் சுற்றுச்சூழலும் ஒருவரின் கற்றல் முறையை மாற்றி அமைக்கும் சக்தி வாய்ந்தது என்றும் கூறியுள்ளார். சில

சமயங்களில் பள்ளி சுற்றுச்சூழலும் வீட்டுச் சுற்றுச்சூழலும் மாணவர்கள் படிப்பதற்கு ஏதுவாக அமையாது. மாணவர்கள் வகுப்பில் அமர்ந்திருக்கும் இடம் பாடத்தில் கவனம் செலுத்துவதற்கு ஏதுவாக இருக்காது, சில வேளைகளில் வகுப்பின் வெளியே மிகுந்த சத்தமாக இருக்கும். இது போன்ற இடையூறுகளினால் ஆசிரியர் கற்பிப்பது இவர்களின் காதில் விழாது. சில மாணவர்களின் வீட்டிலுள்ளவர்கள் மாணவர்கள் படிக்கும் நேரத்தில் சத்தமாகத் தொலைக்காட்சி பார்ப்பர். இது மாணவர்களின் படிக்கும் ஆர்வத்தைச் சீர்குழைக்கும். இதனால், மாணவர்களினால் பி.தி.3 தமிழ்மொழிப் பாடத்தில் சிறப்பு தேர்ச்சியைப் பெற இயலவில்லை.

சில வகுப்பில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் வேளையில் ஆசிரியர்கள் பெரிய சவாலை எதிர்நோக்குகின்றனர். கடைநிலை மாணவர்களுக்குப் பிரத்தியேக கவனிப்புகள் வழங்க இயலாமல் போகின்றன. வகுப்பை அமைதிப்படுத்தவே ஆசிரியருக்கு நேரம் போய்விடும். கடைநிலை மாணவர்கள் இதனை நல்ல வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு பாடப்புத்தகத்தில் எந்தக் குறிப்புகளும் எழுதமாட்டார்கள் (மாதவி, 2013)[6].

POL வகுப்புகளும் மாணவர்களின் தேர்வு முடிவுகளைப் பாதிக்கின்றன. பெரும்பாலும், பள்ளி நிர்வாகத்தினர் POL ஆசிரியர்களுக்குக் கடைநிலை மாணவர்களின் வகுப்பையே வழங்குவர். மாணவர்கள் POL ஆசிரியர்களை வகுப்பு நேரத்தில் மட்டுமே சந்திக்கின்றனர். அவர்களால் பாடம் சம்பந்தமாக உருவாகும் கேள்விகளைத் தங்களின் தமிழ்மொழி ஆசிரியரிடம் கேட்டு விளக்கம் பெற இயலாமல் போகிறது.

பின்தங்கிய மாணவர்கள் பயிற்சி நூல்களைப் பெறுவதற்குக் கடினத்தை எதிர்நோக்குகின்றனர். தமிழ்மொழிப் பாடத்திற்கான பயிற்சி நூல்கள் குறைவாகவே உள்ள பட்சத்தில் மாணவர்கள் முயற்சி எடுத்து ஆசிரியர்களை நாடி புத்தகங்களைப் பெறுவதில்லை. சந்தையில் விற்கும் தமிழ்மொழி புத்தகங்களின் விலை பிற மொழி புத்தக விலைகளைக் காட்டிலும் அதிகமாக உள்ளது. இதற்குக் காரணம் தமிழ்மொழி பயிற்சி நூல்களை வாங்குபவர்களின் எண்ணிக்கை குறைவு. குறைவான எண்ணிக்கையிலான புத்தகங்களை அச்சிடுவதால் குறைவான விலையில் விற்க இயலாது. இதனை மாணவர்கள் புரிந்து கொள்வதில்லை. பிற மொழி புத்தகங்களின் விலைகளை ஒப்பிட்டுத் தமிழ்மொழி புத்தகங்களை வாங்குவதில்லை. வாங்குபவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் தொடர்ந்து நிறைய தமிழ்மொழி பயிற்சி புத்தகங்கள் வெளியிடப்படுவதில்லை. 2014ஆம் ஆண்டு பி.தி.3 தேர்வு அமர்ந்த மாணவர்களுக்குப் பயிற்சி புத்தகங்கள் இல்லை. முதல் ஆண்டு என்பதனால் இந்தப் பிரச்சனை ஏற்பட்டது. ஒவ்வொரு மாநிலமும் சுயமாகப் பயிற்சி புத்தகங்கள் வெளியிட முயற்சி செய்தது. கெடா மாநிலம் இதற்கு முன்னோடியாக அமைந்தது. கெடா மாநிலம் தேர்வுக்கு இரு வாரங்கள் இருக்கும் பொழுது பி.தி.3 தமிழ்மொழி பயிற்சி புத்தகம் ஒன்றினை வெளியிட்டது. நாடு தழுவிய அளவில் அப்புத்தகம் மாணவர்களுக்கு விற்கப்பட்டாலும், காலம் பற்றாக்குறையினால் மாணவர்களினால் புத்தகத்தில் உள்ளவற்றைப் புரிந்து கொண்டு தேர்வு எழுத முடியவில்லை.

**மாணவர்களைச் சிறந்த மதிப்பெண்களைப் பெற வைப்பதற்கான பரிந்துரைகள்**

ஆசிரியர்கள் கொடுத்தக் கருத்துகளின் அடிப்படையிலும் மாணவர்கள் சிலரிடமிருந்து பெறப்பட்டக் கருத்துகளின் அடிப்படையிலும் ஆய்வாளரின் ஆசிரியப் பயிற்சி அனுபவ அடிப்படையில் கீழ்காணும் நடவடிக்கைகள் பின்தங்கிய மாணவர்களின் தமிழ்மொழிப் பாட அடைவிநிலையை மேம்படுத்தப் பரிந்துரைக்கப்படுகிறது. அவற்றில் முதன்மையாக, ஆசிரியர் வகுப்பில் பலவிதமான அணுகுமுறைகளைப் பயன்படுத்த கற்றல் கற்பித்தலை நடத்த வேண்டியது மிகவும் அவசியமானதாக விலங்குகிறது. நாளுக்கு நாள் புதுமையான கற்பித்தல் அணுகுமுறையைக் கையாண்டால் மாணவர்களுக்குப் புத்துணர்ச்சி ஏற்படும் (மணிமேகலை, 2013)[7]. பாடப் புத்தகத்தை மட்டும் வைத்துப் பாடம் கற்பித்தல் இன்று சிறப்பான அணுகுமுறையாக அமையவில்லை. கடைநிலை மாணவர்களுக்கு ஏற்ற பயிற்சிகளைக் கொடுக்க வேண்டும். எளிமையிலிருந்து கடினத்திற்குச் செல்ல வேண்டும். ஆரம்பத்திலே கடினமான ஒரு பயிற்சியை வழங்கினால் மாணவர்களுக்குப் பதிலளிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றவே தோன்றாது. மாணவர்கள் இயல்பாகவே விளையாட்டில் ஆர்வமிக்கவர்கள். கற்றல் கற்பித்தல் முறை விளையாட்டு முறையில் அமைந்தால் மாணவர்கள் ஆசிரியர் கற்பிக்கும் பாடத்தை ஆர்வமுடன் கவனிப்பர் (சந்திரிகா, 2008)[8].

ஆசிரியர்கள் மாணவர்களைக் கவரும் வகையிலுள்ள பாடத் துணைப் பொருட்களை வகுப்பிற்கு எடுத்துச் செல்ல வேண்டும். பாடத் துணைப் பொருள் என்பது கற்றல் கற்பித்தலுக்கு மிகவும் முக்கியமான ஒன்றாகும். தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி செய்யப்பட்ட பயிற்றுத் துணைப் பொருட்களையும் கொண்டு செல்லலாம், பொருட்களாகவும் கொண்டு செல்லலாம். ஆசிரியர் மற்றும் அவர் கையாளும் பொருள்கள், உத்திகள் போன்றவை மாணவர்களின் கவனத்தைக் கவர்வதாகும் (சந்திரிகா, 2008)[8].

ஆசிரியர் பாடத்திட்டத்தின் தேவையைக் கற்றல் கற்பித்தலில் முழுமையாக நிறைவேற்ற வேண்டும். பாடத்திட்டத்தை ஜூலை மாதத்திற்குள் முடித்துவிட்டு ஆகஸ்ட், செப்டம்பர் மாதத்தில் தேர்வு அடிப்படையிலான பயிற்சிகளை வழங்க வேண்டும். இந்தப் பயிற்சிகளை எல்லாம் வகுப்பிலேயே கொடுத்து மாணவர்களைச் செய்ய வைக்க வேண்டும். வீட்டுப்பாடமாகக் கொடுக்கும் பொழுது மாணவர்கள் சுயமாகச் செய்யாமல் பிறரைப் பார்த்து எழுதுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. வகுப்பிலே மாணவர்கள் பயிற்சிகளைச் செய்யும் பொழுது அவர்களின் உண்மையான அடைவுநிலையை ஆசிரியர்களால் தெரிந்து கொள்ள முடியும். இவ்வாறு பயிற்சிகள் வழங்கும் பொழுது, கேள்விகளை எப்படி அணுகுவது என்று அசிரியர் மாணவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும்.

மாணவர்கள் பாடங்களைச் சுயமாகப் புரிந்து கொண்டு செய்வதற்கு முயற்சிகள் செய்ய வேண்டும். பிறரைச் சார்ந்து இருத்தல் கூடாது. முடிந்த வரையில் பல புத்தகங்களிலிருந்தோ இணையத்திலிருந்தோ தேடி கேள்விகளுக்குப் பதிலளிக்க முயற்சிக்க வேண்டும். மனனம் செய்ய வேண்டியவற்றை எல்லாம் மனனம் செய்து பிழையின்றி எழுத பயிற்சிகள் செய்ய வேண்டும்.

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 2- Issue 2 (2018), Pages 146-155 / ISSN: eISSN 2590-3691

**முடிவுரை**

இவ்வாய்வின் மூலம் பி.தி.3 தமிழ்மொழித் தேர்வில் மாணவர்கள் சிறப்பான புள்ளிகளைப் பெறாததற்கான காரணங்களும் இனி வரும் காலங்களின் இப்பிரச்சனையை எவ்வாறு களையலாம் என்று கண்டறியப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் குயவர்கள் போன்றவர்கள். குயவர்கள் கடினமான மண்ணையும் மிருதுவாக்கி, அதற்குப் பல உருவங்களைக் கொடுக்கின்றார்கள். ஆசிரியர்கள் மாணவர்களிடம் உள்ள குற்றம் குறைபாடுகளை நீக்கி அவர்களை முழு மனிதர்களாக, பண்புமிக்க பாசமுள்ள குடிமகன்களாக உருக்கும் கடமையைக் கொண்டவர்கள் (உமா, 2007)[9]. ஆசிரியர் நினைத்தால் கடைநிலை மாணவரையும் பி.தி.3 தேர்வில் சிறந்த புள்ளிகளைப் பெற வைக்க முடியும்.

**மேற்கோள் நூல்கள்:**


1. Kanapathy, V. (2006). *Conceptual basics of education (கல்வியின் கருத்தியல் அடிப்படைகள்)*. Chennai: Santha Publisher.
2. Dunn, R. & Dunn, K. (1978). *Learning Style Inventory Development and Research*: Reston.
3. Randolp. A (2002). *Challenging Your Preconceptions. Thinking Critically about Psychology*. Canada: Wadworth Group.
4. Fatah Hasan. (2001). *Optimal use of mind in learning (Penggunaan minda secara optimum dalam pembelajaran)*. Kuala Lumpur : Sanon Printing Corporatin Sdn. Bhd.
5. Santanam, S. (2008). *Psychology in education (கல்வி உளவியல்)*. Chennai: K.M. Publication.
6. Madavi, N. (2013). *Today's challenges and solutions in teaching (கற்பித்தலில் இன்றைய சவால்களும் தீர்வுகளும்)*. Chennai: Kalainyan Publication.
7. Manimegalai, M. (2013). *Today's challenges and solutions in teaching (கற்பித்தலில் இன்றைய சவால்களும் தீர்வுகளும்)*. Chennai: Kalainyan Publication
8. Santriga, R. (2008). *Learning child (கற்கும் குழந்தை)*. Chennai: Shanta Publisher.
9. Uma, T. S. (2007). *In the power of the student - the role of the teacher (மாணவரின் ஆற்றலில் - ஆசிரியரின் பங்கு)*. Chennai: Shanta Publisher.